தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

முறையீட்டு மனு எண். 125/ந/2019
நாள்.05.04.2022

திரு.B.R.C.சந்திரகுமார்,
விருத்தாசலம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
விருத்தாசலம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், காந்தி நகர், பெம்மடம் சாலையில் வசிக்கும் திரு.B.R.C.சந்திரகுமார் என்பவரின் 09.08.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2019 அன்று பெறப்பட்டு 125/ந/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரது மனு, கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணுமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், காந்தி நகர், பெம்மடம் சாலையில் வசிக்கும் திரு.B.R.C.சந்திரகுமார் என்பவர் தன்னுடைய 09.08.2019 நாளிட்ட மனுவில் விருத்தாசலம் நகராட்சி ஆணையர் திரு.K.பாலு அவர்களின் முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி இயக்குநர், ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை, சென்னை அவர்களுக்கு தெரிவித்ததாகவும், ஆனால் மேற்படி முறையீடுகள் சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் புகார் அளிக்குமாறு ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை இயக்குநரகம் அறிவுறுத்தியதாக தெரிவித்துள்ளார். எனவே, மனுதாரர் ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை இயக்குநர் அவர்களுக்கு விலாசமிட்ட தன்னுடைய 03.07.2019 நாளிட்ட மனுவை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மனுதாரர் 03.07.2019 நாளிட்ட தன் மனுவில் விருத்தாசலம் நகராட்சியில் திரு.K.பாலு என்பவர்

ஆகஸ்டு 2017 முதல் ஆணையாளராக பணியாற்றி வருவதாகவும் கடந்த இரண்டு வருடங்களாக விருத்தாசலம் நகராட்சியில் கீழ்கண்ட முறைகேடுகளில் அவர் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளார்:-

i) விருத்தாசலம் நகரம் சன்னதி தெருவில் வானொலி திடலின் பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் டெண்டர் விடாமல் தன்னிச்சையாக யாருக்கோ சாதகம் செய்ய வேண்டும் என்று, கடைகள் கட்டப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் மற்றும் முன்னாள் நகர் மன்றத் தலைவர்கள், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆட்சேபனை செய்து கட்டி முடிக்கப்பட்ட கடைகளை இடித்து விட்டார். இதனால் இவர் நகராட்சிக்கு பல லட்ச ரூபாய் நிதி இழப்பு ஏற்படுத்தி உள்ளார்.

ii) பொதுமக்கள் பாதுகாப்பு கருதி விருத்தாசலம் பஸ் நிலையம் சுற்றி சுற்றுச்சுவர் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பஸ் நிலையத்தின் வடபுறம் தனியார் மருத்துவமனை உரிமையாளருக்கு பஸ் நிலைய சுற்று சுவரை இடித்து வழி ஏற்படுத்தி கொடுத்துள்ளார். இதுபோன்று பஸ் நிலையத்தின் சுற்றுச் சுவரை இடித்து வழி கேட்டதற்கு முடியாது என்று முந்தைய நகர் மன்ற தலைவர்களால் நிராகரிக்கப்பட்டது. ஆனால் திரு.K.பாலு ஆணையர் தன்னுடைய மனைவியின் பேறுகால மருத்துவ சிகிச்சை ஆலோசனை மற்றும் பேறுகால உதவிக்காக மேற்படி சுற்றுச்சுவரை இடித்து வழி ஏற்படுத்தி கொடுத்துள்ளார்.

iii) விருத்தாசலம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றிய கொளஞ்சி என்பவருக்கு PHSS பதவி உயர்வு கொடுப்பதற்காகவும் துப்புரவு மேற்பார்வையாளராக பணியாற்றிய திரு.S.முத்தமிழ் செல்வன், துப்புரவு பணியாளர் திரு.K.கிருஷ்ணன் ஆகியோருக்கு ஒட்டுநராக பதவி உயர்வு கொடுப்பதற்கும் பலவகையான முறைகேடுகள் செய்துள்ளார். இவர் நேர்மையான அதிகாரி என்றால் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பதவி உயர்வு கொடுத்திருக்கலாம். ஆனால் மறைமுக ஆதாயத்தை மனதில் கொண்டு பதவி உயர்வு கொடுத்து முறைகேடு செய்துள்ளார். இதுகுறித்து மறைமுக விசாரணை செய்தால் உண்மை தெரியவரும்.

iv) 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் விழாவை முன்னிட்டு விருத்தாசலம் நகர தெருக்களில் பொங்கல் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரிகள் வியாபாரம் செய்தனர். மேற்படி வியாபாரிகளிடத்தில் தூய்மை இந்தியா திட்டத்தில் இதுபோன்று தெருக்களில் வியாபாரம் செய்து பொது இடத்தை மாசுபடுத்துவதால் அபராதம் விதித்து தொகை வசூல் செய்வதற்கு சட்டம் உள்ளது என்று வியாபாரிகளை மிரட்டி அபராத தொகை என்று பல லட்ச ரூபாய் வசூலித்து, இன்று வரையில் மேற்படி தொகை நகராட்சி கணக்கில் வரவு வைத்ததாக தெரியவில்லை. இதுகுறித்து தீவிர ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

v) விருத்தாசலம் நகராட்சியில் சுமார் 37 வேலைகளுக்கு (மதிப்பீடு ரூ.1.71 கோடி) டெண்டர் வைக்காமல் டெண்டருக்கு பணம் ஏதும் செலுத்தாமல் திரு.K.பாலு ஆணையர் அவர்கள் தனக்கு வேண்டிய ஒப்பந்ததாரர்களுக்கு வேலை கொடுத்து மேற்படி வேலை, பட்டியலில் கண்டுள்ள வரிசை எண்கள். 5, 6, 10, 17, 18, 19, 25, 29, 30, 31, 33 மற்றும் 35 ஆகிய வேலைகள் முடிந்து விட்டது. ஆனால் மேற்படி வேலைகளுக்கு இதுவரையில் முறையாக டெண்டர் வைக்கவில்லை. இதுகுறித்து மண்டல பொறியாளர் மூலமாகவோ அல்லது நகராட்சி உயரதிகாரிகள் மூலமாகவோ பரிசீலித்து ஆய்வு மேற்கொண்டு கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. இம்முறைமன்ற கடிதம் எண்.125/ந/2019 நாள்.16.08.2019 மூலம் மேற்சொல்லப்பட்ட மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு விருத்தாசலம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. விருத்தாசலம் நகராட்சி ஆணையர் தன்னுடைய கடிதம் ந.க.எண்.4422/2019/இ1, நாள்.28.08.2019–ல் மனுதாரரின் மனு மீதான அறிக்கையை கீழ்காணுமாறு சமர்பித்துள்ளார்:-

- விருத்தாசலம் நகரம் சன்னதி தெருவில் வானொலி திடலின் பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கடைகள் கட்டப்பட்டு பொதுமக்கள் ஆட்சேபனையால் கட்டி முடிக்கப்பட்ட கடைகளை இடித்துள்ளதான சம்பவம் நடைபெற்ற காலத்தில் நான் இங்கு ஆணையராக பொறுப்பில் இல்லை. மேலும் சம்பவம் குறித்து முன்னர் ஆணையர் பொறுப்பு வகித்த மேலாளர் அவர்களிடம் விசாரித்த போது மேற்படி கடை தனிநபர் மூலம் ஆக்கிரமித்து கட்டப்பட்டதாகவும், நகராட்சி மூலம் கட்டப்படவில்லை எனவும் பின்னர் புகார் வரப்பெற்றதின்

அடிப்படையில் சம்மந்தப்பட்ட கடை இடிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

- விருத்தாசலம் பஸ் நிலைய சுற்றுச்சுவரை இடித்து தனியார் மருத்துவமனைக்கு வழி ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள வழி கிட்டதட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாக தனியார் உணவகம் மற்றும் அரசு மதுபான விடுதிக்கு வழியாக பயன்படுத்தப்பட்டு, பின்னர் பயன்பாடு இல்லாமல் புதர் மண்டி கிடந்த நிலையில் மேற்படி தனியார் மருத்துவமனை நிர்வாகம் அந்த இடத்தை வாங்கி வழியாக பயன்படுத்தி வந்த நிலையில், பொது மக்களிடமிருந்து புகார் வரப்பெற்றதையடுத்து இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகராட்சி பொறியாளர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட வழி அடைக்கப்பட்டது.

- துப்புரவு மேற்பார்வையாளராக பணியாற்றிய திரு.S.முத்தமிழ் செல்வன் துப்புரவு பணியாளர் திரு.K.கிருஷ்ணன் ஆகியோருக்கு ஒட்டுநராக பதவி உயர்வுகள் அனைத்தும் உரிய அரசு விதிகளை பின்பற்றி வெளிப்படையான முறையில் பணி மூப்பு அடிப்படையில் அரசு வழிகாட்டு நெறிமுறையின்படி வழங்கப்பட்டது. மேற்படி பதவி உயர்வுகளில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை எனவும்,

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் விழாவை முன்னிட்டு விருத்தாசலம் நகர தெருக்களில் பொங்கல் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரம் செய்த வியாபாரிகளிடத்தில் அரசு ஆணையின்படி தடை செய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தும் நெகிழி உபயோகப்படுத்தும் தள்ளுவண்டி கடைகள் மற்றும் இதர கடைகளை இந்நகராட்சி துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர்கள் மூலம் ஆய்வு செய்து பிளாஸ்டிக் பயன்படுத்தியதற்கான அபராத தொகை இதுநாள்வரை ரூ.52,300/- இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் மூலம் வசூலிக்கப்பட்டு பின்னர் அந்த தொகை நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது எனவும்,

- விருத்தாசலம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் முறையாக திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய ஒப்பந்த தொகை வசூலிக்கப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை என தெரிவித்துள்ளார்.

3. இந்நேர்வில் மனுதாரர் திரு.B.R.C.சந்திரகுமார் அவர்களிடத்தில் வாக்குமூலம் பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு பலமுறை அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும் அவர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. **20.10.2021** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் விருத்தாசலம் நகராட்சியின் முன்னாள் ஆணையர் திரு.கு.அசோக்குமார் அவர்கள் ஆஜராகி கீழ்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

விருத்தாசலம் நகரம் சன்னதி தெருவில் வானொலி திடலின் பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் டெண்டர் விடாமல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கடைகள் பொதுமக்களிடையே எழுந்த ஆட்சேபணையை முன்னிட்டு, மேற்கண்ட கடைகள் இடிக்கப்பட்டுவிட்டன.

விருத்தாசலம் பஸ் நிலையத்தில் உள்ள சுற்றுச் சுவரை இடித்து, தனியார் மருத்துவமனைக்கு வழியாக மருத்துவமனை நிர்வாகம் பயன்படுத்தி வந்தது. தற்போது மேற்கண்ட வழி அடைக்கப்பட்டுவிட்டது.

விருத்தாசலம் நகராட்சியில் துப்புரவுப் பணியாளருக்கு PHSS பதவி உயர்வு முறையான வழிகாட்டு நெறிமுறையின்படி வழங்கப்பட்டது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாக் காலங்களில், விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் தற்காலிக கடைகள் வைக்கப்பட்டிருந்தன. அக்கடைகளில் நெகிழிபை (plastic bag) பயன்படுத்தியதால், அக்கடைகளிலிருந்து அபராதமாக ரூ.52,300/- வசூலிக்கப்பட்டு, அவை நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

விருத்தாசலம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் முறையாக திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, டெண்டர் விடப்பட்டன என்றும், இதில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை என தெரிவித்துள்ளார்.

4. இம்முறைமன்ற நடுவத்தில் **24.11.2021** அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தற்போதைய விருத்தாசலம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு **26.10.2021** நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. **24.11.2021** அன்று விசாரணைக்கு ஆஜரான விருத்தாசலம் நகராட்சி ஆணையர் மற்றும் மேலாளர் ஆகியோர் கீழ்காணுமாறு தங்கள் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

விருத்தாசலம் நகரம் சன்னதி தெருவில் வானொலி திடலின் பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்து 2 கடைகளை கட்டியிருந்தனர். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட 2 கடைகளும் அவை கட்டப்பட்ட இரண்டு மாதத்திற்குள் இடிக்கப்பட்டது என்கின்ற

விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். விருத்தாசலம் பேருந்து நிலையத்தை சுற்றி, சுற்றுச்சுவர் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சுற்றுச் சுவரில் ஒரு பகுதியை இடித்து, தனியார் மருத்துவமனைக்கு வழி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்த இடத்தில் மேற்கண்ட மருத்துவமனையின் மூலமே தற்போது சுற்றுச் சுவர் கட்டப்பட்டுவிட்டது என்றும் இதில் நகராட்சிக்கு அதிக நிதியிழப்பு ஏதுமில்லை எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கடைகள் இடிக்கப்பட்டது தொடர்பாகவும், இடிக்கப்பட்ட சுற்றுச் சுவர் கட்டப்பட்டது தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறோம்.

மேலும், விருத்தாசலம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வுகள் தகுதியுள்ள நபர்களுக்கு நகராட்சிப் பணியாளர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது என்றும், இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் விழாவை முன்னிட்டு கடை வியாபாரிகள் பிளாஸ்டிக்கை பயன்படுத்தியதால் அவர்களிடமிருந்து அபராதத் தொகை வசூலிக்கப்பட்டு, அவை நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

விருத்தாசலம் நகராட்சியில் 37 வேலைகளுக்கான (மதிப்பீடு ரூ.1.71 கோடி) டெண்டர் குறித்த கோப்பினை இம்முறைமன்ற விசாரணையின்போது நாங்கள் எடுத்துவரவில்லை. எனவே, அவை குறித்த விவரங்களை இம்முறைமன்றத்தில் எங்களால் தெரிவிக்க இயலவில்லை. எனவே, மேற்கண்ட டெண்டர் தொடர்பான கோப்பு மற்றும் அதன் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் நாளை 25.11.2021 நேரடியாக சமர்ப்பிக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

5. மேற்சொல்லப்பட்ட வாக்குமூலத்தில் விருத்தாசலம் நகராட்சி ஆணையாளர் முழுமையான தகவல்கள் தெரிவிக்காத காரணத்தினால் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் ஆணையின்படி விருத்தாசலம் நகராட்சி இளநிலை உதவியாளர் 25.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

விருத்தாசலம் நகராட்சியில் ரூபாய் 1.71 கோடி மதிப்பீட்டில் 37 பணிக்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ரூபாய்.5 லட்சத்திலிருந்து 10 லட்சம் வரையிலும், மேலும் 10 லட்சத்திற்கு மேலும் என தனித்தனியாக டெண்டர் கோரப்பட்டது. ரூபாய்.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை மதிப்பீட்டிலான டெண்டர் குறித்து நகராட்சியின் அறிவிப்புப் பலகையில் மட்டுமே இதுகுறித்து விவரம் வெளியிடப்பட்டது. ஆனால் இதுகுறித்து அறிக்கைத் தாள் (Bulletine) ஏதும் விருத்தாசலம் நகராட்சியால் வெளியிடப்படவில்லை.

மேற்கண்ட ரூபாய் 5 லட்சம் முதல் 10 லட்சம் வரை மதிப்பீட்டிலான 17 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கும்போது அப்பணிகளை ஒரு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் அளிக்கப்பட்டது. 06.03.2019 அன்று தொடங்கப்பட்ட பணிகள் 09.05.2019 அன்று சுமார் 2 மாத காலத்திற்குப் பின் முடிவுற்றது. 1 மாத கால தாமதத்திற்கான அபராதத் தொகை ஒப்பந்ததாரர்களிடமிருந்து விருத்தாசலம் நகராட்சியால் வசூல் செய்யப்படவில்லை.

6. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரது மனு, விருத்தாசலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, விருத்தாசலம் நகராட்சியின் முன்னாள் ஆணையருடைய வாக்குமூலம், தற்போதைய ஆணையர், இளநிலை உதவியாளர் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆணையர் அளித்த ஆதாரங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன.

7. இந்நேர்வில் கீழ்காணும் முறைகேடுகள் நடந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது:-

i) டெண்டர் குறித்து அறிவிப்பு பலகையில் மட்டுமே விளம்பரம் வெளியிடப்பட்டது. ஒப்பந்த பணிக்கான அறிவிப்பை அரசு வழிகாட்டுதல்களின்படி பொதுமக்கள் விரும்பிபடிக்கும் நாளிதழ்களில் அறிக்கை தாள் மற்றும் Online-ல் விளம்பர அறிவிப்பு வெளியிடாதது.

ii) நகராட்சியில் 1.71 கோடி ரூபாய் திட்ட பணிகள் 37 பணிகளாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்பணிகள் ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து பத்து இலட்சம் வரையிலும் மேலும் பத்து லட்சத்திற்கு மேலும் தனிதனியாக டெண்டர் கோரப்பட்டது, உள்நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளது என புலனாகிறது.

iii) ஒப்பந்தப்பணிகள் குறித்த காலத்திற்கு முடிக்கப்படாத காரணத்தால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய தவறியது.

8. மேற்காணும் விதிமீறல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட நகராட்சி அலுவலர்கள் மீது அரசு விதிகளின்படி சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் அரசு மற்றும் நகராட்சிக்கான இழப்பீடு சரிகட்டபடுவதையும் கண்காணிப்பதுடன் அத்தகைய முரண்பாடுகள் மற்றும் விதிமீறல்களுக்கு பொறுப்பான அலுவலர்கள் மீதான துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையும் இழப்பீட்டு தொகைக்கான வட்டித் தொகையுடன் சரிக்கட்டணம் குறித்தும் உறுதி செய்து இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கையினை 60 நாட்களுக்குள் அனுப்பி வைத்திட

மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் விருத்தாசலம் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 05-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.B.R.C. சந்திரகுமார்,
   பெம்மடம் ரோடு, காந்தி நகர்,
   விருந்தாச்சலம்,
   கடலூர் மாவட்டம் – 606 001.

2. ஆணையாளர்,
   விருத்தாசலம் நகராட்சி,

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 28.

4. இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

06/04/22
செயலாளர்

06/04/22